www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# தூத்துக்குடி மாவட்டம்

T

## அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்:

## பொதுத் தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடைதருக. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 14×1=14

1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ...........
   அ) ஊடுபயிர் ஆ) இயற்கை உரங்கள்
   இ) மண்புழு ஈ) இவை மூன்றும்
2. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ............
   அ) நூல் தொகை விளக்கம் ஆ) இரகசிய வழி
   இ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு ஈ) மனோன்மணீயம்
3. கலிங்க நாட்டார் சிங்கிக்கு அளித்த பரிசு ............
   அ) பாடகம் ஆ) சிலம்பு இ) மெட்டி ஈ) தண்டை
4. புதுகவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் ............
   அ) ஆற்றூரார் ரவிவர்மா ஆ) மல்லார்மே
   இ) பாப்லோ நெருடா ஈ) வால்ட்விட்மன்
5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல் ............
   அ) உதவியாளர் ஆ) காவலாளி இ) ஆசிரியர் ஈ) மேலாளர்
6. 'ஜனப் பிரளயம்' என்பதன் தமிழ்ச்சொல் ............
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
7. நன்னாடு - இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
   இ) தொழிற்பெயர் ஈ) உரிச்சொல்
8. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
   அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக்கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
   இ) யானை டாக்டர் - குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை
9. பனியும் பனி சார்ந்த நிலமும் ............
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) ஆறாம் திணை
10. 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ............
    அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
11. நேரொன்றாசிரியத் தளை எனப்படுவது ............
    அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
12. 'பால் நிலாப் பாதை' என்ற நூலை எழுதியவர் ............
    அ) ஏ.ஆர்.இரகுமான் ஆ) இளையராஜா இ) கங்கை அமரன் ஈ) பாரதிராஜா

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. "துணையாய் வருவது தூய நற்கல்வி" என்று கல்வியின் சிறப்பைக் கூறும் நூல் ........

அ) நாலடியார் ஆ) திருமந்திரம் இ) திருக்குறள் ஈ) தொல்காப்பியர்

14. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ............ நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லோர் உழவரை

## பகுதி - II

### *பிரிவு - 1*

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3×2=6

15. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

16. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

17. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

18. குறுந்தொகை - குறிப்பு வரைக.

### *பிரிவு - 2*

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்: 2×2=4

19. நாட்டுப்புறங்களிலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

20. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை பற்றிக் குறிப்பு வரைக.

21. 'வரை' என்ற சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

### *பிரிவு - 3*

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி: 7×2=14

22. உயிரீறு, மெய்யீறு பற்றி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

23. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*

அ) அரும்பொருள் ஆ) மணிக்குலம்

24. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*

அ) அலர்ந்து ஆ) நின்றார்

25. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:* குரை, குறை

26. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க :* வைகை

27. *ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக:*

Book Review, Fine Arts

28. *பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக :*

முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

29. *வினாத்தொடராக மாற்றுக:*

தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

30. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2×4=8

31. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன எவை?
32. "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
33. காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
34. தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிர உரை விளக்கப்பாடல் குறிப்பிடும் சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் யார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: 2×4=8

35. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
36. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதை பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
37. தாமஸிகம் என்றால் என்ன?
38. சமணப் பள்ளிகளும், பெண் கல்வியும் - குறிப்பு வரைக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக: 3×4=12

39. பிறிது மொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

செந்துறைப் பாடாண் பாட்டு துறையைச் சான்றுடன் விளக்குக.

40. *பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:*

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

(அல்லது)

ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

41. இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக):

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்து நின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.

- நாமக்கல் கவிஞர்

42. நட்பு (அல்லது) செந்தமிழ் என்ற தலைப்பில் கவிதை வரைக.
43. *தமிழாக்கம் தருக :*
    1. Knowledge rules the world.
    2. Work while you work and play while you play.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. Roads were made for journeys not destinations.
4. Prevention is better than cure.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **3×6=18**

44. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி விளக்குக.

(அல்லது)

'பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை மேலாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

(அல்லது)

'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

47. அடிபிறழாமல் எழுதுக: **4+2=6**

அ) "உண்டால் அம்ம .........." - எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) 'கொளல்' என முடியும் குறள்

----------

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com